மலர் 3 இதழ் 4

வெற்றிமணி

மாணவர் பத்திரிகை



விலை 20 சதம்

1-4-57

ஆசிரியர்:- வித்துவான் மு. கந்தையா.

மாணவர் மன்றம்

அன்பார்ந்தமருமக்களே!

புதுவருடவாழ்த்து யாவருக்கும் தெரிவிக்கின்றோம். ஒரு சந்தோஷச்செய்தி. **மாணவர் மன்றத்தில் மலையாளிலிருந்து பல மருமக்கள் சேர்ந்துள்ளனர்.** இன்னும்பலர் சேர்வதாகத் தெரிவித்துள்ளனர். அவணி மாதம் **மலையா சுதந்திரம்** அடையவிருக்கின்றது. எனவே மருமக்கள் பலரிடையங்கள் அறிவதற்குப் புதிய மருமக்கள் சேர்ந்தது உதவியாக இருக்கும். ஒன்றை மறந்துவிடக்கூடாது. பெண்களுக்கு பெண்கள் மட்டுமே எழுதலாம். மருகிகளிற்சிலர் தமக்குப் பிறர்எழுதியகடிதத்தை **"மணிமாமா"** வுக்கு அனுப்பியுள்ளனர். எழுதியவர்களுக்கு மணிமாமாஎச்சரிக்கைசெய்துள்ளார். மலையாமருமக்கள் வெற்றிணிப்பிரதி ஒவ்வொரு பெறக்கூடியதாக **"ஏஜண்ட்"** ஒருவர் கூடியவகையில் நியமிக்கப்படுவர். அங்கத்தவர் ஒவ்வொருவரும் புதிய அங்கத்தவர்களைச் சேர்ப்பதில் ஊக்கம் காட்டவேண்டும்.

மணிமாமா

புதிய அங்கத்தவர்கள்

217. பி. எம். பாலுசாமி, அ. த. பா., றை—றிமளுவ, நம்புச்சுணை.
218. எம். தவ்பிக்தெயின், ஆர்ச். பீற்றர்கல்லூரி, தெரசம்பு.
219. வ. சேகுமுகம்மது, ஆர்சி. பாடசாலை, முருங்கன்.
220. எஸ். சுப்பிரமணியம், அரசினர் தமிழ்ப்பாடசாலை,
யாலண்டவண் போர்ட், கிள்ளான், மலாயா.
221. ரி. எஸ். ஆறுமுகம், சங்கைநெங்கம் எஸ்டேட்,
பக்கஞ்சிக்கா, P. O., மலாயா.
222. எம். எஸ். சுப்பிரமணியம், ஹைலன்ட்வ எஸ்டேட்,
த. பாடசாலை, கிள்ளான், மலாயா.
223 கே. முனியாண்டி, சங்கைப்பூலோ எஸ்டேட்,
காப்பார் ரோட், கிள்ளான், மலாயா.
224 செல்வி. பரமேஸ்வரி. எஸ். வகுப்பு VI. ஏ.
எம். ஜி. எஸ், கிள்ளான், மலாயா.
225. நெ. வவதூர், அ. த. பா. பெரியகிண்ணியா.
226. டி. க. சண்முகநாதன், (தமிழ்அன்பன்) தே. உ. கி. பள்ளி,
கின்னளபட்டி, இந்தியா.

பேனா நண்பர்கள்

165. செல்வி. பிந்திநோரை, எஸ். 577 சிலைவத்தை, அமுரத்கம.

எது வேண்டும் சொல் தமிழா?

"சிங்களம் மட்டும்" அரசாங்க பாஷையாக்குவது தியாகாணு என்று டோட்டியிட்டுக்கொண்டு கிளம்பின **யூ. என். பியும், எம். ஈ. பி** யும் சென்றவருஷம் மாசிமாசத்தில். இப்போது தமிழுக்கு உரிமை கொடுப்பது தியாகாணு என்று மறுபடியும் போட்டியிட்டுக்கொண்டு கிளம்பியிருக்கின்றன அதே யூ. என். பியும், அதே எம். ஈ. பியும் இந்தவருஷம் மாசி மாதத்தில். ஒருவருஷகாலத்தின் இரு அந்தங்களிலும் குறிப்பிடத்தக்க இருதிருப்பங்களைக்காண்கின்றோம்.

தமிழை அடக்கியாளலாமா? என்றகேள்விக்குத் திரிகோணமலையிலே பிரதிபலிக்குந்தீரமும், மட்டக்களப்பிலே கொந்தளிக்கும் மானமும் சுடச்சுடக் கொடுக்கும் பதில், சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல்நடத்துவதிற் காணுஞ்சிரழிவு, ஓட்டையுடைசல்களுள்ள மோட்டர்ச்சட்டத்திற்குத் தமிழகங்கொடுத்துள்ள சாட்டையடி, பாவித்தமிழ்மனம்பட்டவேதனைக்குப் பரமன்புரிந்தகருணை, எல்லாமாகச்சேர்ந்தே தற்போதைய திருப்பத்தை விளைவித்துள்ளன என்போம்.

இப்போது அட்சியிலுள்ள எம். ஈ. பி முற்றுமுழுதாக எங்கள்கோரிக்கைகளைப் புறக்கணித்துவிடவுங்கூடும். ஆனல், போனமச்சான் யூ.என்.பி, சோஷலிசம் என்னும் ஒரு புதுமணத்தோடு திரும்பிவரப்பார்க்கும் நிலை, இந்த எம். ஈ. பி இன்னும் எங்கள் கோரிக்கைகளைப் புறக்கணிக்க முடியாதென்பதை நன்கு சுட்டிக்காட்டுகின்றது.

இந்தக்கட்டத்தில் எங்கள் கோரிக்கைகள் சம்பந்தமாகப் **பிரதமரும் தீர்மானிக்கும் வட்டமேசைமகாநாடு** நிகழ்வதற்கான அறிகுறிகளுந் தென்படுகின்றன. இம்மகாநாட்டில் எங்கள் சமூகம் வெளியிடுங்கொள்கையில் அபிப்பிராயபேதம் இருத்தல்ஆகாது. எம்மினம் முழுவதற்கும் நன்மை பயக்கக்கூடிய ஏகோபித்த ஒரு கொள்கையை ஒரே குரலாக வெளியிடவேண்டும்.

எங்கள் கோரிக்கையாது? இதுசம்பந்தமாகப் பிரபலமாக அடிபடுவருங் கொள்கைகள் இரண்டு. எம்முள் ஒருபகுதியினர் சமஅந்தஸ்து என்கின்றனர். இன்னொருபகுதியினர் சமஷ்டி என்கின்றனர்.

சமஅந்தஸ்து இன்னதென்பதைப்புரிந்துகொள்வதில் எம்மவர்க்கு எவ்விதமான சிக்கலும் இருப்பதாகத்தெரியவில்லை. சமஷ்டியின் சிக்கலான அம்சங்களைப்புரிந்து கொள்வதிற் பொதுவாக எவரும்மெதினறுகின்றோம். சமஷ்டி அங்குண்டு இங்குண்டு என அறிகின்றோமேயல்லாமல் எங்கள் நாட்டில், நாங்கள் இருக்கும் சூழ்நிலையில் சமஷ்டி எவ்வளவுக்குச் சாத்தியமாகும் என்பதுபற்றி எம்மிடையில் தெளிவானஅபிப்பிராயம் எதுவுமேயில்லை.

வடமாகாணத்தையும் கிழமாகாணத்தையும் பொறுத்த வரையில் எந்தக்கொள்கையுஞ் சாத்தியமாகலாம். இப்போதைய மூக்கியகவலை மற்றையமாகாணங்களில் வாழுந்தமிழினத்தைப் பொறுத்ததாகும். நெருக்கடியான நிர்ப்பந்தமான சூழ்நிலையிலே விடப்பட்டிருப்பவர்கள், இவர்கள். இவர்களுக்குச் சமஷ்டியினால் விமோசனம் உண்டாகுமா? இலங்கையின் அமைப்பைப் பொறுத்தவரையில் ஆராயும்போது சமஷ்டியில் இவர்கள் நிலைஎன்னவாகும்.? இது திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்படவேண்டியவிஷயமாகும்.

இங்கிலையில், இலங்கைவாழ் தமிழினத்தின் பிரதிநிதிகள் அனைவருங் கூடி ஒருமுடிவுகாணவேண்டும். பிரதமரின் வட்டமேசை மாநாட்டுக்கு முன்பே அகில இலங்கைத் தமிழ்ப்பிரதிநிதிகள் வட்டமேசை மகாநாடு கூட்டப்படவேண்டும். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள், அகில இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள், இலங்கைச்சனநாயகாங்கிரஸ் பிரதிநிதிகள் சனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமுகமாக இதிற்பங்குபற்றவேண்டும். இலங்கையில் வாழும் இருபத்தைந்துலட்சம் தமிழரின் நன்மையையும் நெஞ்சில்வைத்து எங்கள்கோரிக்கை இன்னதுதான்என்பதைத் தெளிவாக வேண்டும்.

ஆகவேதான் இருபத்தைந்துலட்சம் தமிழ்க் குலத்தையும் ஒரே முகமாக அழைத்துக் கேட்கின்றோம்-

எதுவேண்டுஞ் சொல் தமிழா?

ஏன்நாம் கீழ்ப்படியவேண்டும்?

மதிகெட்ட கப்பற்றலைவன்

மு. க. சுப்பிரமணியம், வெலர்பொடை.

நாம் இருக்கும் அழகிய இலங்கைத்தீவைச் சுற்றிச்சமுத்திரம் உண்டல்லவா? இங்கிருந்து இந்தியா செல்லவேண்டுமானால் கடலிக்கடக்கத்தானேவேண்டும். பலவருடங்களுக்குமுன் இலங்கையின் வடபாகத்திலுள்ள வல்லுவெட்டித்துறைக்கும் இந்தியாவிலுள்ள கோடிக்கரைக்கும் கப்பற்போக்குவரத்து இருந்தது. முப்பத்தொன்றரைமையில் இடைத்தூரமுள்ள இருஇடங்களையும் பாக்குநீரிணை பிரிக்கிறது. இந்தப் பாக்கு நீரிணையைத்தான் **வீரத் தமிழன் நவரத்தினசாமி** 26. 3. 54 இல் நீந்திக்கடந்தார். முற்காலத்தில் கப்பல்களைச்சரியானபாதையிற் செலுத்துவதற்கு அனுபவமுள்ள வழிகாட்டிகள் இருந்தனர். கடலில் மணல்மேடு, கற்பாறைகள், நீரோட்டங்கள் இருக்குமிடங்கள் இவர்களுக்குத்தெரியும்.

ஒருநாள் வல்லுவெட்டித்துறையிலிருந்து ஒருகப்பல் கோடிக்கரைக்குப்புறப்பட்டது. வழக்கத்துக்குமாறாக அன்று கப்பலைத்தானேசெலுத்தப்போவதாகவும் வழிகாட்டி தேவையில்லையென்றும் தலைவன் கூறிச் செலுத்தினான். வழிகாட்டி கரையிலேயே நின்றுவிட்டான். கப்பல் சிறிது தூரம் சென்றதும் அசையாது நின்றுவிட்டது. காரணம் அது மணல்மேட்டில் புதைந்துவிட்டது. தலைவன் தன்னாலியன்றவரை முயன்றான். முடியவில்லை. தன்பிடிவாதத்தைவிட்டான். கரையைநோக்கிச் சிறுவள்ளத்திற்சென்றான். வழிகாட்டியைக் கூட்டிச்சென்றான். வழிகாட்டி சிறிதுநேரத்தில் கப்பலை அசையச்செய்தான். சரியானபாதையிற் செலுத்தினான். தலைவன் ஏன் சரியானபாதையிற் செலுத்தமுடியாதுபோனான் தெரியுமா? சரியானவழி தெரியாததால்.

தங்கள் பெற்றோர்களிலும்பார்க்கத் தங்களுக்கு அதிகம் தெரியும் என்று எண்ணுகின்ற, சொல்வதன்படி செய்யவிரும்பாத சிறுவர்களை அறிந்திருக்கின்றீர்களா? இவர்கள் கப்பலைச்செலுத்த வழிதெரியாதிருக்க அதைச்செலுத்தமுயன்ற மதிகெட்ட கப்பற்றலைவனைப்போன்றவர்கள். புத்தியுள்ளசிறுவர்கள் எப்பொழுதும் அவர்களுக்குவழிகாட்டுவதையே விரும்புகிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு வழிதெரியாதபடியால்.

ஏன் நாம் கீழ்ப்படிகின்றோம் - எமக்கு வழிதெரியாதபடியால்.

ஆகாயத்தோட்டி

(ஆர். ஆர். என். ஜோர்ஜ். பி. ஏ. பி. எல் சின்னப்பட்டி)

1 ஆகாயத் தோட்டியே வாரப் - நாட்டில்
அசுத்தம் நீக்கிடும் நீயும்
நாசத்தி நுந்திடல் நன்றே - உன்றன்
நாராச கீதமே வேண்டேன்.

2 தந்திர முந்தனின் சொத்து - ஆயின்
காயளந் தன்மான முண்டு
சொந்தாவி னங்கூடி உண்ணும் - உன்றன்
சிலம் எமக்கில்லை அன்றே?

3 தன்னினம் வீழ்ந்திட்ட போது - நீயும்
தாங் கொணைத் துயரங் கொண்டு
துன்பக் குரலிடும் பண்பு - உன்றன்
கன்னல மின்மையைக் காட்டும்.

4 எச்சிலே என்றிட்ட போதும் - இனம்
எல்லாரும் கூடியே உண்பீர்
மிச்சமே ஆன அப்போதும் - தீய
மக்கள் கொடுப்பது முண்டோ?

5 பார்க்க அழகற்ற பட்சி - மேலும்
பாட்டோடா டுமோசம் உண்மை
தேர்ந்தது நுடனே நீயும் - ஆயின்
காழ்ந்தவர் நாங்களே அன்றே?

6 காகச மதர்ம ஆட்சி—நாட்டில்
கண்டிடும் நாநுமென் லூலா?
பாகங்கொ டுத்துண்ணும் பண்பு—இந்தப்
பாரிலே கண்டிட லாமோ?

குழந்தையின் உடல்வளர்ச்சிக்குத் தாய்ப்பால் எப்படியோ, அப்படியே மனிதனின் மனவளர்ச்சிக்குத் தாய்மொழி இயற்கையான தவிர்க்கமுடியாதது. தாயிடமிருந்துதானே. ஆகவே குழந்தைகளின் உளவளர்ச்சிக்குத் தேவைப்படி இருக்கமுடியும்.? குழந்தைதன் முதற்பாடத்தைக்கற்பது உகந்த தாய்மொழியல்லாத வேறொரு மொழியை அவர்கள்மேல்திணிப்பது தாய்நாட்டிற்குச்செய்யும் பெரியபாவமென்றே நினைக்கிறேன்.

தமிழ்த்தீவு

தொடர்ச்சி 2. ஆர். ஆர். என். ஜார்ஜ்

காட்சி 3.

இடம்:- மதுரைரெயில்வே ஸ்டேஷன். **காலம்:** காலை 8 மணி.

(பிரயாணிகள் கூட்டங் கூட்டமாகச் சென்று கொண்டிருக்கின்றனர். எங்கும் ஜனத்திரளின் பரப்பு. ரெயிலிலிருந்து வருவோரை ஜட்கா வாலாக்களும், ரிக்ஷாவாலாக்களும், போட்டர்களும் மொய்த்துக்கொண்டிருக்கின்றனர். அந்தக்கும்பலில் ஆனந்தனும் ஒருவன். சுமைக்காகச் சுற்றி அலைந்துகொண்டிருக்கிறான். அப்பொழுது வியாபாரி ஒருவர் ஒரு பெட்டியோடு வெளியேறுகிறார். ஆனந்தன் அவரை நோக்கி ஓடுகிறான்)

ஆனந்தன்:- சார்! சார்! பெட்டியை என்னிடம் கொடுங்கள். நாலணா கொடுத்தால் போதும்சார். எத்தனையும் சரிசார்.

ஒருபோட்டர்:- (ஆனந்தனைப் பிடித்துத் தள்ளிவிட்டு) போடாகளவா ணிப்பயலே, "லைசன்ஸி" எடுத்தநாங்க இருக்கோம். இவ ருவந்திட்டாரு போட்டிபோட! சார், பொட்டியை இப் படிக்குடுங்கோ....

ஆ:- சார்! சார்! எங்கிட்டக்குடுங்கசார்! இரண்டணாபோதுங்கசார். எங்க அம்மாவுக்கு சொம்பக் காச்சனுங்கோ சார், நீங்க நல்லாயிருப்பீங்க

வி:- சரி, சரி. நீயேபெட்டியைக்கொண்டுவா. ஜாக்ரதையாக கொண்டு வரணும்டா. சொல்லிப்புட்டேன்.

ஆ:- சரிங்க சார்.

(ஆனந்தன் பெட்டியைத் தூக்குகிறான். இருவரும் போகிறார்கள். பெட்டிபாரமாயிருப்பதால், ஆனந்தன் தள்ளாடுகிறான்)

வி:- டேபையா, பெட்டி ஜாக்ரதை. ஆமா! உனக்குவயசென்ன ஆச்சு?

ஆ:- பன்னெண்டுங்க.

(ஆனந்தனின் வகுப்புமாணவன் சுந்தரம் பைக்கட்டுடன் எதிரே வருகிறான்.)

சு:- டே. ஆனந்தா! பள்ளிக்கூடத்துக்குவர்லே? இது என்டா பெட்டி.

ஆ:- பள்ளிக்கூடத்துக்கு வரலேடா, இனிவரவேமாட்டேன். நம்பசார் கிட்டே சொல்லிடு.

சு:- ஏண்டா ஆனந்தா! நீ பள்ளிக்கூடத்துக்குவாயேண்டா. இனி சார் கிட்டே ஒன்னப்பத்தி சொல்லமாட்டேண்டா.

ஆ:- அதுக்கில்லேடா. நானுவேலெசெஞ்சாத்தாண்ட எங்கவீட்டிலே கஞ்சி

வி:- டேபோதும்டாபேச்சு. வா, வா, நேரமாச்சு. (சுந்தரம் பள்ளிக்குப் போகிறான்.) டே. நீபள்ளிக்கூடத்திலே படிக்கியா?

ஆ:- ஆமாங்கா.

வி:- எந்தவகுப்புடா?

ஆ:- இரண்டாம்படிவங்க!

வி:- (ஆச்சரியத்தோடு) என்ன! இரண்டாம்படிவமா? பின்னே என் தம்பி இந்தவேலே செய்கிற?

ஆ:- எங்கம்மாவுக்கு இரண்டுவாரமாக உடம்புசரியில்லே. அதனாலே அப்பளம்போட்டு விக்கமுடியலே. நான்கொண்டுபோற காசுக்குத்தான் அரிசிவாங்கணும். அம்மாவுக்கு மருந்தும் வாங்கணும்.

வி:- ஏ தம்பி! உங்கப்பா என்னசெய்கிறாரு?

ஆ:- எங்கப்பா பர்மாவிலிருந்து இன்னும்வரலேசார். பத்து வருஷ மாச்சு. யாரோ ஒருஅம்மாவுக்குக் கப்பலிலே இடமில்லேயாம். அதுக்கிண்ணு எங்கப்பா கப்பலிலிருந்து இறங்கி இடத்தைக்குடுத் தாங்களாம். எங்கஅம்மா சொன்னதையும் கேட்கலியாம். அடுத் தகப்பலிலேயே வந்திடுவேன்னு சொன்னுங்களாம். இன்னும்வ ரலீங்க. எங்கஅப்பா எப்படியும் வந்துடுவார்லே சார்?

வி:- ஆமடாதம்பி. உங்க அப்பாகட்டாயம் வந்துடுவார். நல்லவர்களே கடவுள் கைவிடமாட்டார். இத்தனே பெரியபெட்டியை நீ எப்ப டித்தான் சுமந்துவந்தாயோ! (பெட்டியைத்தானே தாங்குகிறார்) அதோ! அதுதான் வீடு தம்பி. வா.

ஆ:- (நன்றிபொங்கும் கண்களோடு) சார்! சார்! பெட்டியை நானே வைச்சிருக்கிறேன் சார்!

வி:- வேண்டாம்தம்பி. வேண்டாம். எனக்கும் உன்னேப்போல் ஒரு மகனிருக்கிறான் தம்பி. அதோ! அதுதான் என்வீடு. (வீடுவந் விடுகிறது. வியாபாரி ஆனந்தனே பெஞ்சியில் உட்காரச் சொல்லு கிறார்)

ஆ:- (மரியாதையாக) சார்! எங்கம்மா தனியாகக் கஷ்டப்படுவாங்க சார். நான் போகணும் சார்.

வி:- காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்தம்பி. இதோ....

ஆ:- வேண்டம் சார். ரொம்பநன்றி. எங்கம்மா...

வி:- சரிதம்பி. (பணம் எடுக்கிறார்) இந்தா இதைவச்சுக்கோ. உங்க அம்மாவுக்கு மருந்தும் வாங்கிக்கொடு, நீயும் காப்பிசாப்பிடுதம்பி.

ஆ:- (பணத்தை வாங்குகிறான்) ரூபா. 3. இருப்பதைப்பார்த்து) சார்! சார்! வேண்டாம் சார்! இரண்டணாத்தான் பேசினது சார்!

வி:- அதெல்லாம் சரிதான்தம்பி. ஒன்றும்வித்தியாசமாக நினைக்காதே. என்னை உனது சொந்த மனுஷனாநினைச்சுக்கோ. எப்போ உதவி தேவைப்பட்டாலும் பயப்படாமல்வா.

ஆ:- (கண்ணீரோடு) சார்! நீங்க ரொம்பநல்லவங்க. எங்கப்பாவந்தவுடன் இந்த ரூபாவைத் தந்துடறேன் சார்.

வி:- (சிரித்துக்கொண்டே) அப்பாவந்தவுடன் ஒண்ணுக்கு ரெண்டு கொடுத்துடு.

ஆ:- (சிரித்துக்கொண்டே) நான்போய்ட்டுவர்றேன்சார். வணக்கம்சார்.

வி:- நல்லதுதம்பி! போயிட்டுவா. (ஆனந்தன் போவதைப்பார்த்துக் கொண்டே) என்னபண்பு! என்ன தன்மானம்! கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்று... சும்மாவா சொன்னார்கள்.

[தொடரும்]

குடும்பஒற்றுமை குறைவில்லாப்பொக்கிஷம்

(செல்வி. அல்லியா பரீது - அழுக்கம)

ஒருகுடும்பம் சீர்பெற்றுவிளங்க ஒற்றுமை இன்றியமையாதது. குடும்பஒற்றுமையைவிடச் சிறந்தபண்பாடு வேறொன்றுமில்லை. ஆதலால் ஒருகுடும்பத்தவர் ஒருமனப்பட்டு ஒற்றுமையாகவாழ்ந்தால் "மண் கூடப் பொன்னாகிவிடும்" சீனமக்கள் கூறுவர். அதுமட்டுமா! அவர்களைச் சிங்கங்கள்கூட எதிர்க்கப்பயப்படும் என்று கூறலாம்.

ஒற்றுமையுடன்விளங்கும் ஒருகுடும்பத்தில் என்றும் வாழ்வு பெருகும். பணம்விருத்தியாகிச் செல்வம் கொழிக்கஆரம்பிக்கும். சிக்கன வாழ்க்கையையும், பரந்தமனப்பாண்மையும், சகோதரபாசத்தையும் ஏற்படுத்துவதற்குத்தக்கசாதனம் ஒற்றுமை ஒன்றேயாகும்.

எக்காரியத்தையும் எல்லோரும் கூட்டுமுறையாகத் தொடங்கினால் அது எளிதில் முடிவடையும். பாடசாலையில் நடைபெறும் சிலவிளையங் களைக்கொண்டு சமூகமனப்பான்மையும் ஒற்றுமையின்மகத்துவத்தையும் கற்றுக்கொள்ளுகின்றோம். **"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு"** நம்மில் ஒற் றுமை நீங்கில் அனைவருங்குந்தாழ்வு.

என்ற ஆன்றோர் வாக்கைக்கருத்திற்கொள்ளவேண்டும். ஒற்றுமை இருந்தாற்றான் வாழ்க்கைப்படகை அலைகள் கவிழ்த்துவிடாதபடி செலுத் திச்செல்லலாம். ஒற்றுமையின்றித் தனித்துச் செலுத்தினால் வாழ்வு ஒளிபெறமாட்டாது. ஒரு குடும்பத்தவரிடம் தங்கள் சீவியத்துக்குக் குறைந்த தொகையில் வருமானம் இருப்பினும் அவர்களின் ஒற்றுமை யின் விளைவால் அது பொலிவுற்று விளங்கி எல்லோரும் மதிக்கும்படி செய்யும்.

சில குடும்பங்களில் மனைவி அல்லது கணவன் அல்லது குழந்தைகளி டம் சகிப்புத்தன்மை இன்மையால் குடும்பங்களில் பிளவு உண்டாகிவிடு கின்றது. அப்போது இவர்கள் **"அடம்பன்கொடியும் தீரண்டால்மிடுக்கு"** என்பதை மறந்துவிடுகிறார்கள். இக்காலத்தில் கணவன்மனைவிக்கிடை யிலும் சகோதரங்களுக்கிடையிலும் சச்சரவு எற்படுவதினால் அவர்கள் அடையும் தீமைகள் அனந்தம். இதற்குக்காரணம் என்ன? போதிய வருமானம் இல்லாமை, பேராசை, அறிவின்மை என்பவையே.

துன்பத்தை அனுபவிப்பவன்தான் இன்பத்தின் இனிமையை அறி வான். எத்தனை கஷ்டங்கள் அடைந்தாலும் அவற்றைப் பொருட்படுத் தாது ஒற்றுமையாக வாழவேண்டும்.

குடும்பப்பெண்கள் குடும்ப விளக்குகளாய்த் திகழ வேண்டுமாயின் ஒற்றுமையைக் கடைப்பிடித்து **"போதுமென்றமனமே பொன் செய்யும் மருந்து"** என்பதற்கிணங்க, தன்னம்பிக்கையுடன் வாழவேண்டும்.

குடும்பஒற்றுமையே குறைவில்லாத் பொக்கிஷமாகும்.

தொடர்ச்சி 6

ஜாலத்தீவு.

(கா. தமிழ்த்தம்பி, சின்னப்பட்டி)

வழிபிறந்தது.

அழகியவானத்திரையின்மீது வசந்தபுத்திகொண்டு காலமானகருவை யைஅள்ளித்தெளித்திருந்தாள் இயற்கையழகி! கடைந்தெடுத்த காந்தச் சிலையோ, "ஷாக்" கடிக்கும்மின்சாரமோ என்றெண்ணும்படி மின்னல் சிங்காரி தன்மேனியழகைக்காட்டினாள். மானிடனேபார்! என்னைவிடவா உங்கள் ஆடழகிகளின் இடைபிரகாசிக்கிறது.

சிங்கச்சிலைக்குன்றை நோக்கி இரு ஜீப்கார்கள் பறந்துகொண்டிருந்தன. ஆயிற்று. கார்களிரண்டும் நின்றன. அதினின்று ஒருசட்டையரன அசாமியும், ஒருதாடிக்காரனும் கீழேபிறங்கினர். சற்றுத்தூரம் நடந்தனும் ஒருசிறுப்பக்கில் திரும்பினர். அவ்வளவுதான். குபீரென்றுமலைக் கழுகுகள் எழுந்தன. தாடிக்காரன் அதைக்கவனித்தான். அதுஒருபெரிய பாறாங்கல்! அதன்அருகிலே ..

ஒருசலம் கைதட்டப்பக்கிடந்தது. எங்கிருந்துதான் அந்த சாட்சை பலம்வந்ததோ? வந்த சட்டைஆசாமிக்கு. அக்கல்லைப்புரட்டினான். அதுகடபாடாவென்றலறியவாறே ஒரு பாழுங்கிணற்றிலே போய் விழுந்தது. எங்கிருந்தோ முளைத்தஒரு முகமூடி, உருவம் அந்தத் தாடிக்காரனை நோக்கிக் குறிவைத்தது. மறுகணம் "டிமீல்!... டிமீல்" லென்று கணைக்கற்ற ரவைகள் பறந்தன. அலல் தப்பிக்கொண்டான் தாடிஆசாமி. சொல்லிவைத்தாற்போல ஒரேதடவையில் அந்தமுகமூடி உருவத்தைச் சுட்டுவிழ்த்திவிட்டான் தாடிக்காரன். காட்டெருமைபோலக்கறுத்திக்கொண்டே கீழேசாய்ந்தது அந்த உருவம்.

அச்சமயம் 'விர்' னெப்பறந்துவந்த கட்டாரியொன்று ஒருமரத்தில் குத்திட்டுநின்றது. தாடிக்காரன் அதையெடுத்துப்படித்தான்.

சித்தா!

பேடியே! உன்உடல் இங்குள்ளதாக அருவிக்குக்கூடப்போதாது. சந்தானம் விஷயத்தில் கடும் தோல்விகண்டாய்! ஜாக்கிரதை! இல்லையேல் எங்கள் 'S' மார்க்கட்டாரிக்கு எத்தகுமிடமும் பலியாவாய்!

இரும்புமனிதன்

உடனேகட்டை ஆசாமியை இழுத்துக்கொண்டு அங்கிருந்த அந்தக் கோவிலுக்குச் சென்றான் தாடிக்காரன். ஓரேபயங்கரம் அரசோச்சியது அந்தப்பாழடைந்த கோவிலிலே! 'புஸ்' ஸென்று சீறிக்கொண்டு புயல் வேகத்தில் வந்த ஒரு பாம்பைத் தன் ரிவால்வரினால் தீர்த்துக்கட்டினான் ஆசாமி.

அந்தக்கோவிலைச் சுற்றிப்பார்த்துவரும்போது ஒரு எழுத்துப்பட்டியை நன்கு கவனித்தாடிக்காரன் அதிலுள்ளவற்றை அப்படியேகுறித்துக்கொண்டான். தன் கழுத்தில் கிடந்த கமராவினால் ஒருபடம் பிடித்துக்கொண்டான்.

தாடிக்காரனுக்கு ஓரேமகிழ்ச்சி! கட்டை ஆசாமியிடம் ஏதோ கூறிச்சைகைசெய்தான்! மறுநிமிஷம், ஏதோபயங்கரமான ஓலிகேட்டது. இருவரும் எங்கோ ஓடினர். காரின் உறுமல் சப்தம்தான் கேட்டது! மறுகணம்-

வானமே இடிந்துவிழுந்தாற்போல் பேய் மழை கொட்டத்தொடங்கியது! எங்கும் ஆவேசமான புயல்! காற்று! திடீரென்று விழுந்த பேரிடியில் அந்தவட்டாரமே அலறியது.

ஜாலத்தீவினிலே.

பார்ப்போருள்ளம் பதை பதைக்குமாறு பரந்து விரிந்து கிடக்கும் அந்தநீலக்கடலிலே நான்கு கப்பல்கள் மிதந்துகொண்டிருந்தன. பௌர்ணமிதினமாகையால் ஓரே கொந்தளிப்பாயிருந்தது. அந்தக்கலங்களோ சிறிதும் அச்சமின்றி விரைந்துகொண்டிருந்தன. அச்சத்தைப்பார்த்தால் பிறந்ததிலே பேயர்களால் துரத்தப்பட்டுக்கடல்கடந்து கண்ணீருடன்வாழும் வாழ்க்கையாவது கிடைத்திருக்குமா கணக்கற்ற தமிழருக்கு?

கப்பலில் சிந்தனும் போலீஸ் கமிஷனர் நாகராஜனும் மாறுவேடத்தில் அமர்ந்திருந்தனர். இடியட்டோதலியில் குல்லாயுடன் மீனவன் போன்று வேடிக்கையாகக் காட்சியளித்தான். தன்னிடமுள்ளபைனாகுலரினால் அடிக்கடி பார்த்து ஆனந்தக் கூச்சலிட்டான். கடற்காற்றோ "விர், விர்" என்று வீசிக்கொண்டிருந்தது. அலைகளின் ஆர்ப்பரிப்பைக் கேட்கவே வேண்டாம்.

அண்ணே!... அதோ! யானைபோல ஒருதீவு தெரிகிறது... என்று கூறி யவாறே மகிழ்ச்சியினால் குதித்தான். குறும்புக்கார இடியெட். டேய்! அதிகமாக குறும்புசெய்தே அப்புறம் திமிங்கிலம்வந்துடும்டா. பேசா மலிரு என்று சிந்தன்கூறவே இடியட்பயத்தினால் 'கம்' மென்றுபேசாம லிருந்துவிட்டான். சிந்தனும் தம்பைனைகளால்மூலம் அடிக்கடி பச்சோந்தி போல் நிறம்மாறும் அத்தீவைக்கண்டுகளித்தார். தம்காதில் பிணைத் திருந்த அந்த சகிய கருவியின்மூலம் ஏதோசெய்தார். எப்படியோ ஒருவழியாக அத்தீவைபடைந்தனர்.

திடீரென்று ஏதோபயங்காரமான மணியோசை கேட்டது. அங்கி ருந்த நீலமாளிகையைச்சுற்றி ஓரே புகைமண்டலம்! மறுகணம் சிப்பி போன்ற ஒருபகுதி 'படீ' என்று வெடித்தது! அதினின்று குபு, குபு வென்று புகைவந்தது. அவர்களுக்கோ வியப்புவேறு; விவரிக்கமுடி யாத பயம் வேறு.

இந்தன் அந்தக்குகைகளின் படிகளின் வழியே ஓடினார். அடுத்த நிமிடி? யாரடா அவன்? என்றகுரல்கேட்டு குலைநடுங்கிவிட்டார். அதை சன்கு கவனித்தும் அலையசமாகச் சிரித்துக்கொண்டே அங்கிருந்த வாயில்காச்சும் சிலையைக்கீழேதள்ளினார்! உடனே அந்தச்சிலை மறைந்து விட்டது. ஏதோகோரமான கர்ஜனைகேட்டதுதான் தாமதம் சிந்தன் ஏதோ! 'விசில்' கொடுத்தவிட்டு எங்கோதாவினார்.

மறுகணம் பம்பரம்போன்றிருக்கும் ஒரு விசித்திரமான குன்றை யடைந்தனர். ஏற்கனவே கமிஷனரும், இடியட்டும் அங்குகின்று கொண்டிருந்தனர். பாந்து விரிந்த பல்லாயிரக்கணக்கான விழுதுகளை யுடையஅந்த ஆலயத்தில் பறவைனங்கள்அமர்ந்து 'காச், மூச்' சென்று கத்திக் தீர்த்தன. பாழும் மனிதனுக்குப்பிறந்து பயன் என்ன? பறவை யாகப் பிறந்திருந்தாலும் பண்போடு வாழ்ந்திருப்போமே! திடீரென்று அந்தமரம் 'சட சட' வென்று தரையில் சாய்ந்தது. அவ்வழியே ஓடோ டியும் வந்தயானைக்கும்பலும் அதில் சிக்கிக்கொண்டது.

மறுநிமிஷம்?....

(வளரும்)

விவேகப்போட்டி. இல. 3, பரிசுரூபா 500.

வரக்கூடியவிடைகள் **முடிவு திகதி 25-4-57**

1. **சமம்**:-சமானம்; **ஏமம்**:-இனபம்; **சேமம்**:-இன்பம்; **நாமம்**:-புகழ்
2. **சத்தி**:-சக்தி; **உத்தி**:-செல்வம்; **புத்தி**:-அறிவு; **யுத்தி**:-உபாயம்
3. **அகம்**:-அகம்பாவம்; **சோகம்**:-துன்பம்; **தாகம்**:-ஆசை **நோகம்**:-ஆசை
4. **பாட்டி**:-மூதாய்; **கோட்டி**:-பைத்தியம்; **பீட்டி**:-பாட்டி; **குட்டி**:-குழந்தை
5. **சூரம்**:-வீரம்: **கௌரம்**:-கீர்த்தி; **ரம்**:-அழகு; **வீரம்**:-வலி
6. **பாவம்**:-அக்கிரமம்; **அவம்**:-கேடு: **தவம்**:-தவசு; **பவம்**:-பாவம்

மணியும் ஒலியும்

எம். எம். சரவன், பெரியநீலாவணை:—

வெற்றிமணியில் சினிமாநட்சத்திரங்களின் படைப்படங்கள் வெளியிடப்படுமா? பதில்:— இல்லை.

மு. முகமது ஜிப்றி, 5-4, யாட்அப்புறோச்வீதி, திருகோணமலை

"ஸ்ரீ" என்ற எழுத்து எந்தமொழியைச் சேர்ந்தது?

பதில்:—சமஸ்கிருத மொழியைச் சேர்ந்தது.

எ. ஆர். ஏ. ஜலீப், நிந்தவூர்க்கிளை, கிண்ணியா:—

"அவதும் அழிவதும் பெண்ணாலே" என்பது உண்மையா? பதில்:-ஆம்

மணிமாறன், கிண்ணியா:— சீதையின் தாய்தந்தையர் யார்?

பதில்:— தகப்பன்-ஜனகன். தாயின்பெயர் பிரசித்தமாகவழங்கிவரவில்லை.

வே. பத்மநாதன், இந்துக்கல்லூரி, சாவகச்சேரி:—

மாணவர்கள் அரசியல் போராட்டங்களிற் பங்குபற்றலாமா?

பதில்:— அரசியலியலாம், போராட்டங்கள் கூடாது.

புரட்சிவேந்தன், கிண்ணியா:—

இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்திருக்கும்போது இலங்கையில் வதியும் எல்லாமக்களும் என் அச்சுதந்திரத்தைக் கொண்டாடக்கூடாது?

பதில்:— எல்லாமக்களுக்கும் சுதந்திரம் என்பது பேச்சளவில்மட்டுமே. காரியமளவில் இல்லை.

நா. கனகசுந்தரம், சின்னப்பட்டி:—

ஈழத்தில் வெளியாகும் பத்திரிகைகளில் அதிகமாய் விற்பனையாகும் பத்திரிகை எது?

பதில்:— தமிழில், தினகரன். ஆங்கிலத்தில், டெயிலிநியூஸ்.

விவேகப்போட்டி இல. 2 இன் முடிவு

சரியானவிடை

1. நோக்கு. 2. காகம். 3. ஆலம். 4. போகம். 5. சாம்.

முதற்பரிசு ரூபா 150.

முற்றிலும் சரியான விடையனுப்பிய ஐந்துபேரும் தலைக்கு ரூபா 30 பெறுகின்றனர்.

1. திருமதி. வேதவல்லி. பாலசிங்கம், கோப்பாய்.
2. திருமதி. சோ. குணவதி, திகாரியா.
3. எஸ். அண்ணாமலை, உரும்பிராய்.
4. வே. வன்னியசிங்கம், குரும்பசிட்டி.
5. எஸ். நடேசராசா, திகாரியா.

இரண்டாவது பரிசு ரூபா 100.

ஒரு பிழையுடன் விடையனுப்பிய பன்னிரண்டு பேர்களும் தலைக்கு ரூபா 8 சதம் 34 பெறுகின்றனர்.

1. சி. இரத்தினேஸ்வரி, நாவலப்பிட்டி.
2. ஏ. ஏச். எம். அகமது, மாத்தளை.
3. சு. சிவலிங்கம், கலகா.
4. காதர் சுல்தான், தெமட்டைக்கொடை.
5. செல்வி. க. நாகரத்தினம், நல்லூர்.
6. ம. ஜெயராமன், தம்பிலுவில்.
7. வி. சபாபதிப்பிள்ளை, அராலி.
8. சு. குணரத்தினம், திருநெல்வேலி.
9. எம். பி. எம். ஹாசெயின், காலி.
10. சி. எம். அனிபா, அக்கரப்பத்தினை.
11. சி. நவரத்தினம், மாவனல்லை.
12. எஸ். ஏ. சர்மா, வவுனியா.

விசேஷபரிசு

30 ரூபாவுக்கு அனுப்பிய சோ. குணவதி, 25 ரூபாவுக்கு அனுப்பிய எஸ். நடேசராசா, 23 ரூபாவுக்கு அனுப்பிய ஏ. ஏச். எம். அகமது முறையே ரூபா 25, 15, 10. பெறுகின்றனர்.

பரிசுத்தொகைகள் 20. 4. 57. இல் அனுப்பப்படும்.

விவேகப் போட்டி இல. 3

மொத்தப் பரிசு ரூபா. 500-00

முதற்பரிசு ரூபா. 300·
விசேஷபரிசு· முதலாவது ரூபா 35-

இரண்டாவது பரிசு ரூபா 150-
இரண்டாவது ரூபா 15-

முடிவு திகதி 25.4.57 சனிக்கிழமை பி. ப. 4 மணி.

சரியானவிடை 25-4-57 பி. ப. 4-15 மணிக்கு நேயர்கள் முன்னிலையில் திறக்கப் படும். சரியான விடை போட்டியிற் பங்குபற்றும் யாவருக்கும் அனுப்பப்படும், பரிசுபெற்றோர் விபரம் 1-5-57 வெற்றிமணியில் வெளியிடப்படும்,

பிரவேசக்கட்டணம்

1 கூப்பன் அனுப்ப 50 சதம் 3 கூப்பன்கள் அனுப்ப 1 ரூபா

3 ரூபாவுக்கும் அதற்குமேலும் கூப்பன்கள் அனுப்புகிறவர்கள் ரூபாவுக்கு 4 கூப் பன்கள்வீதம் அனுப்பலாம்.

நிபந்தனைகள்.

1 அச்சுக் கூப்பன்கள் இடையரவிடில் தனிக்காகிதத்தில் விடைகளை எழுதியும் அனுப்பலாம்

2 ஒரேகவரில் ஒரே முறையில் அதிகப்படியான கூப்பன்கள் அனுப்புகிறவர்க ளுக்கு முறையே ரூபா 35, ரூபா 15, விஷேச பரிசாகக் கொடுக்கப்படும்,

3 முடிவு திகதிக்குப்பின்பு கிடைக்கும் கூப்பன்களும் உரியபிரவேசக்கட்டணமி ன்றி வரும் கூப்பன்களும் நிராகரிக்கப்படும்

4 பரிசுபெற உரிமையுண்டெனக் கருதுகிறவர்கள் 10 சத முத்திரை வைத்து எழுதினால் அவர்களனுப்பிய விடைகள் திரும்பப் பார்வையிடப்படும். விடை களின் பிரதிகளும் அனுப்பப்படும்,

5 விடைகளும் பிரவேசக்கட்டணங்களும் விவேகப்போட்டி நாவலப்பிட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்,

வெற்றிமணி மாணவர்மன்றம்

21 வயதிற்குட்பட்டவர்களும் பாடசாலை மாணவர்களும் மாணவர் மன்றத்தில் அங்கத்தவர்களாகச்சேரலாம். விண்ணப்பப்பத்திரங்கள் தேவையானோர்எழுதுக.

Vettimani ▪ Nawalapitiya.

விவேகப்போட்டி இல. 3,

	1	2	3	4	5	6	
1	.....மம்	.....மம்	.....மம்	.....மம்	.....மம்	.....மம்	வரக்கூடிய விடைகள்
2	.....த்தி	.....த்தி	.....த்தி	.....த்தி	.....த்தி	.....த்தி	
3	.....கம்	.....கம்	.....கம்	.....கம்	.....கம்	.....கம்	1-4-57
4	.....ட்டி	.....ட்டி	.....ட்டி	.....ட்டி	.....ட்டி	.....ட்டி	வெற்றி மணியில்
5	.....ரம்	.....ரம்	.....ரம்	.....ரம்	.....ரம்	.....ரம்	
6	.....வம்	.....வம்	.....வம்	.....வம்	.....வம்	.....வம்	உண்டு.

பெயர்.....

விலாசம்.....

போஸ்ரல் ஆடர் / பி, க, கூப்பன் } இல.....

கூப்பன்தொகை.....
எஜன்சி இல.....

குறிப்புகள்

1 எல்லோரும் இதாக வாழவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்
2 இது இல்லாதகாரணத்தால் சிலர் சிலகாரியங்களைச் செய்யமுடிவதில்லை.
3 இது குறைந்தால் சுகம் ஏற்படும்,
4 .....ஏதாவது சொல்லிக்கொண்டே இருப்பது வழக்கமே,
5 இராமன் இதிலே சிறந்து விளங்கினன்
6 இது செய்தால் அதற்குத்தக்க பலன் கிடைக்கும்

வெற்றிமணி இதழ் 4; (1—4—57)

விவேகப்போட்டி இல 3 க்கு வரக்கூடியவிடைகளும், கட்டுரைகவிதைகளும் மாணவர் மன்றமும் உண்டு, 20 சத முத்திரையனுப்பிப் பெறுக,

வருடசந்தா ரூபா 2- சதம் 50

விவேகப்போட்டி இல. 2 இன் சரியான விடை

1. நோக்கு, *2* காகம், *3.* ஆனம், *4.* போகம், *5.* சரம்

Vivekappoddy—Nawalapitiya.

Saravi Gampola 3841

STUDIO JAYANTHI,

PHOTO ARTISTS

Life Size - Enlargements Indoor & Outdoor
Groups, Express Developing, Printing and Enlarging
and Picturae Frming,

ඔබේ

සුකොමල බිළිදුගේ

කඩා අවදිය

ඔබට අමතක වන්නෙනිද?

එය

ඔබට අමතක විය නොහැක්කේ

එම බිළිදුගේ සුරතල් වයසේදී

'ජයන්ති'

ඡායාරූප – ශාලාවේ

අතගි ඡායාරූපයක්

ලබා ගැනීමේ

පහසු මිලටත්.

අලංකාරයටත්,

කලව වේලාවටත්

ඔබට ඡායා රූපයන්

ලබා ගතහැකි එකම සථානය

ගම්පෙල නුවරඑළිය විදියේ

පිහිටි

"ජයන්ති"

ඡායාරූප ශාලාව

ඔව අමතක කොකරන්න.

தங்கள் தேவைக் கென்றே
என்றும் திறந்திருக்கிறது.
கம்பளை நியூநுவரேலியா ரோட்டில்
புதிதாகத் திறக்கப்பட்ட

ஸ்டூடியோ

ஜயந்தி

- விவாக தேவைகட்கு
- விளையாட்டு வைபவங்கட்கு
- விருந்துபசாரங்கட்கு
- விரைந்த வேடிக்கைகட்கு
- விரும்பிய தோற்றங்களில்
- விதவித நிறங்களில்
- விரிவு படுத்தி
- விரைவில் பெறுவதற்கு

விஜயம் செய்யுங்கள்
சிறந்தவேலை — குறைந்தவிலை

Dealers in.
KODAK, GEVAERT, AGFA, & ILFORD MATERIALS

New NuwaraEliya Road Gampola.

egram: JAYANTHI — Telephone 240

Registered as a News Paper at the G. P. O. No. 59/300

அட்சர கேத்திர கணிதங்கள்

6-ம் வகுப்புத் தொடக்கம் S.S.C வகுப்புவரை

அட்சரகணிதம் புதியதொரு பாடமன்று. எண்கணிதம் படிப்பிக்கப்படும் போது பல வேளைகளிற் சில அட்சர கணித விதிகளும் படிப்பிக்கப்பட்டு விடுகின்றன. ஆகவே அட்சர கேத்திர கணிதங்களில் மாணவர் தேர்ச்சி அடைவதற்கு ஒரே யொரு வழி, 6-ம் 7-ம் வகுப்புகளில் அவற்றின் ஆரம்ப விதி களைத் தக்கமுறையில், அவர்களுக்கு விளங்கவைப்பதே.

இதற்கேற்ற உரிய - சிறந்த நூல்.

பரமேஸ்வரக் கல்லூரி கணித — விஞ்ஞான ஆசிரியர்

திரு. ச. சிதம்பரப்பிள்ளை B. A., B. Sc. (Lond)

அவர்கள் எழுதிய

அட்சர கேத்திர கணிதங்களே.

அட்சர கணிதம்	1-ம் புத்தகம்	ரூபா 3. 00
,,	2-ம் புத்தகம்	3. 00
கேத்திர கணிதம்	1-ம் புத்தகம்	3. 00
,, ,,	2-ம் புத்தகம்	2. 00

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

தனலக்குமி புத்தகசாலை,

சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு:- சரவண அச்சகம், நாவலப்பிட்டி.

பதிப்பாசிரியர்:- K. V. மகேந்திரன்